திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களில் பலர் மாலை நேரங்களில் மேற்படிப்புப் படிக்க இருக்கின்றார்கள். அவர்கள் மாலைக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க வசதியாக இருக்கும்பொருட்டு, அரசு அலுவலகங்களைக் காலை 9 மணிக்கே ஆரம்பிக்கலாம். இதை அவர்களிடத்தில் சொன்னால் நிச்சயமாக அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். பிற்பகல் 3 மணிக்கு அலுவலக நேரத்தை முடித்தால் திருமணம் ஆனவர்கள் சினிமாவுக்குப் போவார்கள். காதலர்கள் கடற்கரைக்குப் போவார்கள். இப்படியெல்லாம் அவர்களிடத்தில் சொன்னால் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, அரசு அதைச் செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சினிமாத் துறையில் இருக்கிற நண்பருக்கு சினிமா நேரம் தெரியாதிருப்பதற்காக வருந்துகிறேன். இரண்டரை மணிக்கு ஆரம்பமாகிற மேட்டினி ஷோவுக்கு 3 மணிக்குப் போனால் அந்த மேட்டினி ஷோவை நிச்சயமாகப் பார்க்க முடியாது. (சிரிப்பு) அரசு அலுவலக நேரம் 10.30 முதல் 5.00 வரை என்று இருந்ததை 9.30 முதல் 4.00 என்றும், சில அலுவலகங்களை 9.00 முதல் 3.30 என்றும், தலைமைச் செயலகத்தில் 9.30 முதல் 4.00 வரை என்றும் ஏற்கெனவே நாம் திட்டம் வகுத்து, அதுபோல் வேலை நேரங்களை வைக்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், தலைமைச் செயலக அலுவலர்கள் ஒரு கூட்டமே போட்டு, அதற்கு என்னையும் அழைத்து, ஒரு கோரிக்கை வைத்து, உடனடியாக வேலை நேரத்தை மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பிறகுதான் 9.30 என்பதை 10.00 ஆகவும் 4 மணி என்பதை 4.30 ஆகவும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

சென்னை மாநகரில் அசாதாரண மரணங்கள்.

*27 வினா—**திரு. கே. டி. கே. தங்கமணி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் தற்கொலை போன்ற அசாதாரணமான மரணங்கள் அதிக அளவில் நிகழ்ந்துள்ளன என்பது உண்மையா?

1973 ஆகஸ்ட் 7]

(இ) 1970, 1971, 1972 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த மரணங்களின் எண்ணிக்கை யாது?

(உ) இவற்றிற்கான காரணங்கள்குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

(எ) அத்தகைய நிகழ்ச்சிகளைத் தடுக்க அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடுப்பு நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) தற்கொலை முயற்சிகுறித்துத் தமிழ்நாட்டில் 1967-ஆம் ஆண்டில் காவல் துறை ஆராய்ச்சி நிலையம் ஆய்வு செய்தது.

(எ) தற்கொலை சிக்கல் வாய்ந்த ஒரு பிரச்சினையாகும். எல்லாச் சூழல்களிலும் இதற்குத் தெளிவான பரிகாரம் சொல்வதற்கில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், 1970 ஆம் ஆண்டு 659 பேரும், 1972 ஆம் ஆண்டு 894 பேரும் தற்கொலை முதலிய விஷயங்களில் இறந்ததாக விவர அறிக்கை கூறுகிறது. தற்கொலை செய்துகொண்டவர்கள் 208 பேர் என்றும், விஷம் சாப்பிட்டவர்கள் 172 பேர் என்றும் போட்டிருக்கிறது. 172 பேர்கள் மற்றவர்கள் விஷம் கொடுத்து இறந்தார்களா? அல்லது, அவர்களாகவே விஷம் சாப்பிட்டு இறந்தார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தெரியாமல் நச்சுப் பொருட்களைச் சாப்பிட்டதன் காரணமாக இறந்தவர்களுடைய பட்டியலாகத்தான் அது இருக்க முடியும்.

திரு. நா. வீராசாமி: தற்கொலை போன்ற அசாதாரண சாவுகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது 1970, 1971, 1972 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போயிருக்கிறது. பெரும்பாலும் காதலர்கள் தற்கொலைதான் பத்திரிகைகளில் வருவதைப் பார்க்கிறோம். ஆகவே, வயது வந்த காதலர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, தற்கொலை செய்து கொள்கிறவர்களைப் பெற்றோர்களிடமிருந்து விடுவிக்க அரசு இன்னும் தீவிரமாக முயற்சி எடுக்குமா?

@ 141–142-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.

[1973 ஆகஸ்ட் 7

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : யார் யார் காதலர்கள் என்ற பட்டியல் தெரிவிக்கப்படுமானால் அதற்கான பாதுகாப்பு முயற்சிகளை எடுத்துக்கொள்ள இயலும். (சிரிப்பு)

திரு. என். கே. பழனிசாமி: தற்கொலை செய்து கொள்பவர்களைப்பற்றி போலீசார் பரிசீலனை செய்திருப்பார்கள். அப்படிப் பரிசீலனை செய்ததில், தற்கொலைக்குக் காரணம் பெரும்பாலும் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும்தான் என்பதைக் கண்டுபிடித்தார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தற்கொலைக்கு முக்கிய காரணங்கள் வீட்டிலே ஏற்படுகிற தகராறுகள், தொல்லைகள், குணமாகாத சில நோய்கள், காதலிலே ஏற்படும் ஏமாற்றங்கள், வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்கள், மாணவர்களுக்குத் தேர்விலே தோல்வி ஆகியவை போன்றவையாகும். சில நேரங்களில் வறுமையும் காரணமாக இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த நச்சுப் பொருட்களை விற்பவர்களைக் கண்காணிப்பதற்கு இன்னும் அதி தீவிரமான நடவடிக்கை மேற்கொண்டால் இம்மாதிரி நச்சுப் பொருட்களை உடனுக்குடனே தடை செய்யலாம். அதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கூடுமான வரையில் எல்லாத் தீவிரமான நடவடிக்கையும் அதற்காக எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், சில நச்சுப் பொருட்களுக்கு லைசென்ஸ் பெற்றுவிடுகிற காரணத்தினால் அவை மருந்துகள் என்ற பெயரில் விற்கப்படுகின்றன. அவைகளையெல்லாம் தடுப்பதற்கான அதிகாரம் நம்மிடத்தில் இல்லை, அதை மத்திய அரசிடமிருந்து பெற வேண்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, ஸ்டேட் ட்ரான்ஸ் போர்ட் பஸ்களில் 'தேர்ட் பார்ட்டி இன்ஷூரன்ஸ்' செய்யாததால் சாலை விபத்துக்கள் அதிகமாகியிருக்கின்றன என்று சொல்கிறார் களே, அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றித் தனிக் கேள்வி கேட்கவும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, சென்னை நகரில் உள்ள கூவம் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது என்று சொல்லிக் கொள்கிறார்களே, அதைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி ஒன்றும் நாளுக்கு நாள் கூவம் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை பெருகுவதாகத் தகவல் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த விவர அறிக்கையில் தீ விபத்துகளால் இறந்தவர்கள் 120 பேர் என்று சொல்லப் பட்டிருக்கிறதே, அது வீடுகள் எரிந்ததால் ஏற்பட்ட தீ விபத்துக்களா அல்லது தற்கொலை விபத்துக்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த விபத்துகளில், வீடுகள் எரிந்ததால் ஏற்பட்ட விபத்துகளும் உண்டு. சில தற்கொலைக்காகத் தீ வைத்துக்கொண்டவைகளும் உண்டு. சில பேர் அடுப்படியில் வேலை செய்துகொண்டிருந்தபோது ஸ்டவ் வெடித்து இறந்த விபத்துகளும் உண்டு.

Industrial Liaison Board

* 51 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to set up an Industrial Liaison Board consisting of representatives of Industries and Technical Educational Institutions in this State; and

(*b*) if so, the functions of the Board?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) தொழில் தொடர்பு வாரியம் இம்மாநிலத்தில் ஏற்கனவே அமைக்கப் பட்டுள்ளது.

(இ) அறிக்கையொன்று@ அவையில் வைக்கப்பட்டுள்ளது.

@ 143-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.